அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.327(1/)

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்-கொழும்பு.7
1987 ஜனவரி 08 ஆம் தேதி.

ஜில்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

1986 புதிய சம்பளங்கள்
சம்பள அளவுத் திட்டங்களின் உச்சக் கட்டத்தில் தேக்கத்தை உண்டு பண்ணும் வரையறைகளை நீக்குதல்-02.05.1986ம் தேதிய 327ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கான விளக்கம்.

02.05.1986ஆம் தேதிய 327ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 18ஆம் பக்கத்திலிருக்கும் குறிப்பானது அதே பக்கத்தில் இடது புறத்தில் காட்டப்பட்டுள்ள 12 சம்பள தொகுதிகளுக்கு மட்டுமே பொருந்தும். 17ஆம் பக்கத்தில் இடது புறத்திலுள்ள 8 சம்பளத் தொகுதிகளுக்கு இது பொருந்தாது. அத்துடன் அந்த சம்பளத் தொகுதிகளின் விதித்த புதிய சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்க வருடாந்த சம்பளம் ரூபா. 8,400/- ஆக இருத்தல் வேண்டும்.

ஒப்பம்:டி.பி.ஜ.ப்.எஸ்.சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.